**அக்மீமன பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரில் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 22 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து அக்மீமன பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆண்டிற்காக செலுத்தப்பட்டிருந்த கணக்காய்வுக் கட்டணம் ரூபா 176,640 தொகையினை மீளாய்வாண்டிற்கான செலவுகள் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,296,419 ற்கான பங்களிப்புத் தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காதுடன்,<br>மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 51,078 ற்கான பங்களிப்புத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | |
|---|---|---|
| (இ) பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 10,921,058 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,811,500 தொகை என்பன நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 141,495,966 தொகை மற்றும் ரூபா 4,997,861 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் முறையே ரூபா 130,574,908 மற்றும் ரூபா 3,186,391 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான தகவல்களை பெற்று சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 834,174 இற்கான வித்தியாசம் ஒன்று காட்டப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெறவேண்டிய கணக்கு** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 109,675,534 தொகைக்கான 04 பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு வேண்டும். | கண்டறிந்து எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் ரூபா 914,429 தொகைக்கான நிர்மாண வேலைக் கடன் | செலுத்தவேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு | கண்டறிந்து எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| கொடுத்தோர், 2008 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்பட்ட ரூபா 170,957 ற்கான பலவின கடன்கொடுத்தோர் மீதி, 2012 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 310,010 தொகைக்கான செலவுக் கடன் கொடுத்தோரினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுப்பேன். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 82,073,833 தொகைக்கான 14 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர்பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) விதி 59 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 145 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான அட்டவணையொன்று தயாரிக்கப்பட்டு பேரேட்டில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) விதி 155 | பிரதான காசேடு PS 10 படிவத்தின் படி பேணப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (v) விதி 217 | சபைக்குச் சொந்தமான அனைத்துக் காணிகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான படிவேடு ஒன்று PS 46 படிவத்தின் படி நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

-------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | இரண்டு நடைமுறைக் கணக்கிலிருந்து வழங்கியிருந்த ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலத்தை மிகைத்துள்ள ரூபா 91,760 தொகை பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் செயற்படுவேன். |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 1645 | 05 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி செயற்படுவேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2010 ஆகஸ்ட் 17 திகதிய PE/01/01 இலக்கங் கொண்ட மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் சுற்றறிக்கை | வீதி விளக்குகள் பராமரிப்புக்காக மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமையினால் 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது வீதி விளக்குகளின் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட ரூபா 165,000 தொகையினை மீளளிப்புச் செய்வதற்கு முடியாமலிருந்தது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |
| (ஈ) | (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுவேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,887,137 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 27,082,256 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2019 மதிப்பீட்டு வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்க ப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,225,000 | 4,177,539 | 2,516,333 | 10,543,923 | 5,205,000 | 4,176,393 | 3,143,902 | 8,882,717 |
| வாடகை | 1,988,200 | 2,166,135 | 1,624,168 | 1,354,965 | 2,796,200 | 1,656,123 | 1,413,325 | 812,998 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,621,000 | 1,559,055 | 1,238,972 | 320,983 | 2,876,000 | 1,114,097 | 1,114,097 | 900 |
| ஏனைய வருமானங்கள் | 31,566,536 | 28,972,124 | 15,524,927 | 147,037,451 | 27,920,000 | 28,351,770 | 1,629,000 | 133,590,254 |
| | 40,400,736 | 36,874,853 | 20,904,400 | 159,257,322 | 38,797,200 | 35,298,383 | 7,300,324 | 143,286,869 |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளுக்காக மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிப்பேன். |

### (இ) நிர்மாண வேலைகளை செயற்படுத்துவதின் முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) மீளாய்வாண்டின் போது நெறிமுறை அடிப்படை ஏற்பாடுகளின் கீழ் கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 330,000 ற்கான 04 செயற்திட்டங்களின் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். | ஏற்பாடுகளை பெற்றுக்கொண்ட பின்னர் செயற்திட்டத்தை செயற்படுத்துவேன் என அறிவிக்கின்றேன். |
| (ii) உள்ளக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபை, உள்ளூராட்சி அமைச்சின் கீழ் கிராமிய பிரதேசங்களில் பாதைகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டதின் படி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 9,989,848 தொகைக்கான 12 செயற்திட்டங்கள் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு செயற்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். | ஏற்பாடுகளை பெற்றுக்கொண்ட பின்னர் செயற்திட்டத்தை செயற்படுத்துவேன் என அறிவிக்கின்றேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, சேவையை விட்டுச் சென்றுள்ள, சேவை இடை நிறுவத்தப்பட்டிருந்த 08 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 144,156 தொகை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **நூலகப் புத்தகங்களை பயன்படுத்துதல்** | | |
| முன்னைய ஆண்டின் பண்டக் கணிப்பீட்டின் படி அப்புறப்படுத்தப்பட வேண்டிய மற்றும் திருத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த 393 நூலகப் புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி செயற்பட வேண்டும். | பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி செயற்படுகின்றேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 6,221,373 தொகை பெறுமதியான கொம்பெக்டர் வண்டி ஒரு வருடத்தை மிகையான காலம் முதல், கை டிரக்டர் வண்டி மற்றும் டிரக்டர் டேலர் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | திருத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |